Registered as a Newspaper

STAFF COPY NOT FOR SALE

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு சித்திரை மீ 15 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபா பிறை 28 (28-04-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 129

## ராஜீவை புதுடில்லியில் சந்தித்தபின் எம். ஜி. ஆர். எடுத்த முடிவு

# தமிழகம் ஈழத்தமிழருக்கு ரூ. 8 கோடி உதவி;

# உணவு, உடை, மருந்தாக வழங்கப்படும்

### சுபநேரம்

28-04-1987
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10-28 முதல் 11-58வரை
ராகுகாலம்:-
2-58 முதல் 4-28 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
சிறுத்தொண்டர் குருபூசை



எம். ஜி. ஆர்.

## நிவாரண அமைப்புகள் மூலம் அனுப்பும் இலங்கை அரசாங்கம் ஊடாக அல்ல

சென்னை, ஏப். 28

ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடையால் கடந்த நான்கு மாதங்களாகப் பாதிக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கு, நான்கு கோடி ரூபாவை (இலங்கை நாணயப்படி எட்டுக்கோடி ரூபாவை) தமிழக அரசாங்கம் நிவாரண உதவியாக வழங்கும்.

எட்டுக்கோடி ரூபா பெறுமதிக்கு உணவுப் பொருள்கள், உடைகள், அத்தியாவசிய மருந்து வகைகள் என்பன வழங்கப்படும்.

இவை யாவும் தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழர் நிவாரண அமைப்புக்கள் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

இத்தகவலை தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் வெளியிட்டார்.

எந்தக் கட்டத்திலும், இலங்கை அரசு ஊடாக இந்த உதவி வழங்கப்படமாட்டாது எனவும் திரு. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

*பிரதமர் ராஜீவ் காந்தியின் அவசர அழைப்பின் பேரில் வியாழன் இரவு புதுடில்லி சென்று வெள்ளிக்கிழமை இரண்டு சுற்றுப்பேச்சுக்களை நடத்தி விட்டு முதலமைச்சர் திரு. இராமச்சந்திரன் சனி காலை சென்னை திரும்பினார்.*

*அதன் பின்னரே, இலங்கைத் தமிழருக்கு அத்தியாவசிய மருந்து, உணவு, உடைகளை அனுப்பும் முடிவை முதலமைச்சர் எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*முதலமைச்சரின் முடிவை, உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் நேற்று தமிழ்நாடு சட்டசபையில் அறிவித்தார்.*

*இலங்கை நிலைமை பற்றி விசேட விவாதத்தின் முடிவில் பண்ருட்டி இராமச்சந்திரன் இதனை வெளியிட்டார்.*

*சட்டசபைக் கூட்டம் முடிந்த பின்னர் செய்தியாளர்கள் உணவு அமைச்சரைப் பேட்டி கண்டனர்.*

*நிவாரண உதவிகளை எப்படி இலங்கைத் தமிழருக்கு அனுப்பப்போகிறீர்கள்? - இப்படி செய்தியாளர்கள் அமைச்சரைக் கேட்டனர்.*

*"தமிழ் நாட்டில் உள்ள நிவாரண மற்றும் அமைப்புக்கள் மூலம் இந்த உதவிகள் வழங்கப்படும்" - இப்படி அமைச்சர் இராமச்சந்திரன் பதிலளித்தார்.* (ஆ-எ)



ராஜீவ்

### 20 சடலங்கள் அடக்கம்

கொழும்பு, ஏப். 27

கொழும்பு புறக்கோட்டை குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் 20 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் நேற்று கொழும்பில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன. (உ)

### லோக சபையிலும் நேற்றுக் கண்டனம்

புதுடில்லி, ஏப். 28

விமானத் தாக்குதலால் இலங்கைத் தமிழர் பெருமளவில் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள் என்று பல எம். பி. க்கள் நேற்று இந்திய லோக் சபாக் கூட்டத்தில் கண்டனம் தெரிவித்தனர்.

அ. தி. மு. க எம். பி திரு. குழந்தைவேலு நேற்று இலங்கைத் தமிழர் நிலைமை குறித்து விவாதம் நடத்தவேண்டும் என்று சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

மார்க்ஸிய எம். பி. (4ஆம் பக்கம் பார்க்க)

### பலாலி - காங்கேசன் ரோந்தின்போது

## சிப்பாய்கள் சூட்டுக்கு 3 பொதுமக்கள் பலி

பலாலி, ஏப். 28

நேற்று பலாலியில் இருந்து காங்கேசன் துறைக்குச் சென்ற இராணுவத்தின் சூட்டுக்கு மூவர் பலியானினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காலை பலாலி - காங்கேசன்துறை வீதி வழியாக முதல் தொகுதிச் சிப்பாய்கள் கவச வாகனங்களுடன் செல்ல அடுத்த தொகுதியினர் காங்கேசன்துறை ஊடாகச் (4 ஆம் பக்கம் பார்க்க)

### பயணிகளை பணயம் வைத்து

# ரோந்து வந்த சிப்பாய்களில் ஐவர் கண்ணிவெடிக்குப் பலி

### பயணிகளிலும் எழுவர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஏப். 28

பஸ் பயணிகளை பணயம் வைத்து ரோந்து வந்த சிப்பாய்கள்மீது போராளிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் ஐந்து சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

ஆத்திரமடைந்த சிப்பாய்கள் பயணிகளை வெளியே இழுத்துப் போட்டுச் சுட்டதில் ஏழு பயணிகள் கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை பத்து மணி அளவில் வெள்ளாங்குளத்துக்கும் இலுப்பைக் கடவைக்கும் இடையில் இச் சம்பவம் நடைபெற்றது.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

நேற்று மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பயணிகள் பஸ்வந்து கொண்டிருந்தது.

வெள்ளாங்குளம் பகுதியை பஸ் அண்மித்ததும் நாற்பதுக்கணக்கான சிப்பாய்கள் பஸ்ஸிற்குள் ஏறியதுடன் பஸ்ஸுக்கு முன்னாலும் நடை பயணியாக வந்துகொண்டிருந்தனர்.

பஸ் காட்டுப் பகுதி ஒன்றில் வந்துகொண்டிருந்தபொழுது பஸ்ஸுக்கு முன்னால் நூறு யார் தூரத்தில் கண்ணி வெடி வெடித்தது.

நடைபயணியில் வந்து கொண்டிருந்த சிப்பாய்களில் ஐந்து பேர் உடல் சிதறிய நிலையில் கொல்லப்பட்டனர்.

இதனை அடுத்து அப்பகுதியில் போராளிகளும் (4 ஆம் பக்கம் பார்க்க)

# நீர்வேலியில் குண்டு வீச்சு!

### ப. நோ. கூ. ச. அலுவலகம் சேதம்

பலாலி, ஏப். 28

நேற்று பகல் நீண்ட நேரம் வட்டமிட்ட பொம்மர்கள் பகல் 12 மணி அளவில் திடீர் என திசைமாறிச் சென்று நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தின் மீது குண்டுகளை வீசின. 90 கலிபர் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இரு பொம்மர்களும் ஒரு ஹெலிக்கொப்டரும் இத் தாக்குதலில் ஈடுபட்டன.

இதனால் காரியாலயத்தின் மேல்மாடி சேதம் அடைந்தது. அதனுடன் இணைந்திருந்த இரும்புப் பொருள் களஞ்சியம், கூட்டுறவு மாதர் பகுதியின் விற்பனைப் பகுதி என்பன முற்றாகச் சேதமுற்றன.

கூட்டுறவுச் சங்கத்தின் லொறி ஒன்றும் பாவிக்க முடியாதவாறு சேதமடைந்தது.

வீதியில் சென்ற வாகனங்களையும் ஹெலிக்கொப்டர் துரத்தித் துரத்திச் சுட்டது.

பருத்தித்துறைக்குச் சென்ற மினி பஸ் ஒன்றுக்குச் சூடுபட்டதால் அதில் சென்ற பிரயாணிகள் இருவர் காயமடைந்தனர்.

நீர்வேலிக் கந்தசாமி கோவிலிலும் ஓடுகள் சேதமுற்றுள்ளன.

வீதிகள் ஹெலிக்கொப்டரின் தாக்குதலால் குழிகளாகக் காண (4ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முனி



தாண்டா விட்டாலும் தன் தசை ஆடும் எண்டு சும்மாவே சொல்லுறது. ஜே ஆரும், பிரேமதாசவும், லலித்தும் இப்ப நல்லா ஓடி முழிப்பினம்.... ஆனால் தடுக்க ஏலாது!

புறக்கோட்டைக் குண்டு வெடிப்புக்கு மட்டும், அவையள் அமெரிக்காவெண்டும் கனடாவெண்டும், சுவிட்டன் எண்டும் எத்தனை பேரிட்டை நிவாரண உதவி வாங்கி விட்டினம்.... இந்த ஒரு இழவை யுக்கை....!

# பொம்மர்கள் வட்டமிட நகரில் மக்கள் பதற்றம்

### பலர் பதுங்கு குழிகளில் தஞ்சம்

யாழ்ப்பாணம், ஏப் 28

நேற்று குண்டு வீச்சு விமானங்கள், ஹெலிக்கொப்டர் ஆகியவை பல முறை யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளை வட்டமிட்டன.

இதனால் நல்லூர், யாழ்ப்பாணப்பகுதிகளில் பதற்றம் ஏற்பட்டது.

கடைகள் யாவும் கட (4ஆம் பக்கம் பார்க்க)

### அரசு கணக்கு விடுகிறது!

கொழும்பு, ஏப். 28

கடந்த ஐந்து தினங்களுக்குள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளில் சுமார் 400 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

-இப்படி பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று பி.பி.சி. வானொலி நேற்று மாலை தெரிவித்தது.

எப்படி இருக்கிறது அரசின் கணக்கு? (உ-எ)

## 45 சிப்பாய்கள் ஆயுதங்களுடன் தலைமறைவு!

### காடுகளில் பெரும் தேடுதல்

யாழ்ப்பாணம், ஏப். 28

கரடிப்போக்கு, ஓமந்தை இராணுவ முகாம்களில் இருந்து 45க்கும் அதிகமான இராணுவத்தினர் ஆயுதங்களுடன் தலைமறைவாகி விட்டதாகத் தெரியவருகிறது.

இவர்களைத் தேட இரண்டு ஹெலிக்கொப்டர்கள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி, மாங்குளம், கிலவமடு, முள்ளித்தீவு காட்டுப்பகுதிகளில் தேடுதல் நடத்தின.

இதேவேளை தரைமார்க்கமாக தேடுதல் நடத்திய படைப் பிரிவினர் அவ்வேளையில் சில சிப்பாய்களைத் துப்பாக்கிப் பிரயோகத்தின் பின் கைது செய்ததாகவும் கூறப்படுகிறது.

கரடிப்போக்கு சிப்பாய்கள் தலைமறைவானதை அடுத்து கரடிப்போக்கு சென்றிநிலையில் தற்பொழுது வாகனங்கள் எதுவும் சோதனையிடப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களில் சிப்பாய்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை ராணுவ நடவடிக்கையை நாடுவதால் பெரும் விபரீதம் ஏற்படும்

### தமிழக சட்டசபையில் பண்ருட்டி எச்சரிக்கை

சென்னை, ஏப். 28

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இராணுவ நடவடிக்கையில் ஈடுபடும் இலங்கை அரசின் போக்கினால் பெரும் விபரீதம் ஏற்படும்.

இப்படி, தமிழக சட்டசபையில் உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் எச்சரிக்கை விடுத்தார்.

இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்படுவது குறித்து தமிழ்... முழு அளவிலான விவாதம் நேற்று நடைபெற்றது.

இதற்காக கேள்வி நேரம், கவன ஈர்ப்புத் தீர்மான நேரம் ஆகியன ரத்துச் செய்யப்பட்டன.

விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் சொன்னதாவது:

இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் இருதரப்பினரின் போக்கையும் பொறுத்தே முடிவு அமையும்.

ஆரம்பத்தில் இருந்து இலங்கை அரசு இன, மத, மொழி அடிப்படையில் செயற்பட்டு வருகிறது.

### பிரேமதாஸ பேச்சு

பிரதமர் பிரேமதாஸ (4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

அறிவித்தல்

நாம் புதிய கிளை ஸ்தாபனம் ஒன்றை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள (Bank of Ceylon) அருகாமையில் ஆரம்பித்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். எல் வைத்திய நிபுணர்களின் பிரிஸ்கிரிப்சன் செய்த கண்ணாடிகளைச் சரிவரப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம். S M. Fernando 580, 1 ஆம் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (1111)


கிளிநொச்சி:

# புதுமுறிப்புக்குளம் நீர் விநியோகம் தடை

## விவசாயிகள் மத்தியில் உட்பூசலாம்

கிளிநொச்சி, ஏப். 28 கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தின் கீழ் இம்முறை சிறுபோக நெற் செய்கை செய்வதில் விவசாயிகளிடையே எழுந்துள்ள உட்பூசல் காரணமாக நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இக்குளத்திலிருந்து சிறுபோக நீர் விநியோகம் சம்பந்தமாக கடந்த மார்ச் 19 ஆம் திகதி கூட்டம் ஒன்று நடைபெற்றது.

மத்தியவகுப்பினருக்கு 40 ஏக்கருக்கும் ஜெயந்திநகர் குடியேற்ற வாசிகளுக்கு 62 ஏக்கருக்கும் சிவநகர் வாசிகளுக்கு 102½ ஏக்கருக்கும் கீழ் மத்திய வகுப்பினருக்கு 4 ஏக்கருக்கும் மாடசாமி கோயில் காணி வயலுக்கு 9 ஏக்கருக்கும் நீர் விநியோகிப்பது எனவும் ஏப்ரல் 1 ஆம் திகதி நீர் திறந்துவிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

புதுமுறிப்பு மத்திய வகுப்பினர் தங்கள் வயல்களில் இரண்டு ஏக்கர் வீதம் நெற் செய்கைக்குப் போக மிகுதிக் காணியில் ஜெயந்திநகர் வாசிகளை விதைக்க விடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சிவநகர், ஜெயந்திநகர் வாசிகளின் தண்ணீர்ப் பங்குகள் வழங்கக்கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் இவை நடைமுறையில் இல்லாத காரணத்தால் விவசாயிகளிடையே எழுந்த உட்பூசலால் தற்போது நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது. (இ-76)

### சேதமடைந்த வீடுகள் விவரம்

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 28

வல்வெட்டித்துறை நெல்லியடிப் பகுதியில் சமீபத்தில் இடம்பெற்ற பொம்மர் ஹெலித் தாக்குதலால் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர் விவரம்:-

செ. கணேசமூர்த்தி, தி. திருச்செல்வம், சின்னத்தம்பி, உமாபதி ராசா, செ. சூரியசேகரம், சிதம்பரபிள்ளை, சபாரட்ணம், ந. ஞானச்சந்திரன், ந. ஜெயரட்ணம், ஆ. நாகராசா, பொ. சுந்தரநாதன், ஏ. இராசதுரை, பொ. தம்பிப்பிள்ளை வி. புலோமிநாதர், எஸ் சின்னராசா, ஆ. பெரியதம்பி' என்போர் ஆவார். (இ 160)

### பதவி உயர்வு

கொடிகாமம் ஏப் 28 சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபராகப் பதவி ஏற்ற திரு. க. சண்முகலிங்கம் இரு மாதத்தின் முன் முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றார்.

புதிய உதவி அரசாங்க அதிபராக வரணியூரைச் சேர்ந்த திரு புண்ணியமூர்த்தி சுந்தரம்பிள்ளை பொத்துவிலில் இருந்து மாற்றலாகிப் பதவி ஏற்றுக்கொண்டார். (இ-78)

# இப்படியும் நடக்கிறது

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 28 பொம்மர் தாக்குதலில் இருந்து தப்புவதற்கு குடியிருப்பாளர்கள் பதுங்கு குழி தற்போது சுறுசுறுப்பாக அமைத்து வருகின்றனர்.

அண்மையில் தனது வளவில் பதுங்கு குழி வெட்டாத ஒரு குடியிருப்பாளர், பொம்மர் தாக்குதல் தீவிரம் அடைந்தபோது, இன்னுமொரு குடியிருப்பாளர் தனது வளவில் அமைத்துள்ள பதுங்கு குழியில் பதுங்கிக் கொண்டார்.

அதற்காக அந்தப் பதுங்கு குழிக்குத் தேவையான மரங்களையும் அவர் கொடுத்து உதவினார்.

பொம்மர் தாக்குதல் தற்போது தணிந்து விட்டதல்லவா!

கொடுத்து உதவிய மரங்களை அந்தக் குடியிருப்பாளர் திரும்ப வாங்கிக் கொண்டார்.

அதற்கு அவர் கூறிய காரணம், கறையான் பிடித்து மரங்கள் பழுதாகிப் போய் விடும் என்பதுதான்.

அவரின் செயலைக் கண்டு பொது மக்கள் கைகொட்டிச் சிரித்தனர். (இ-எ-160)

# சுய முயற்சி மூலமே கிராம அபிவிருத்தி

## மாதர் சங்கக் கூட்டத்தில் உரை

மண்டைதீவு, ஏப். 28 எமது சுய முயற்சியின் மூலமே கிராம அபிவிருத்தியை இலகுவில் மேற்கொள்ள முடியும்.

மண்டைதீவு மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. நரசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவி செல்வி ஞானமணி நடராசா அவர்களின் தலைமையில் கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

செல்வி நரசிங்கம் அங்கு தொடர்ந்து பேசுகையில் இக்கிராமத்தில் இருக்கும் இளைஞர்கள் யுவதிகள் முன் மாதிரியான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அத்துடன் எமது பகுதியில் கிடைக்கக் கூடிய மூலவளங்களை தகுந்த முறையில் பயன்படுத்தி சிறு கைத்தொழில் துறைகளையும் மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

மற்றும் விசேஷ சேவை உத்தியோகத்தர் திரு. எஸ். சிவகுலசிங்கம் உட்பட பலர் பேசினார்கள்.

கூட்ட இறுதியில் நடப்பாண்டு நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றது. (இ-88)

தொடர்ச்சியான தாக்குதல்கள்

# இனப் படுகொலையின் வெளிப்பாடே என்கிறது வர்த்தகர் சங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 28 அண்மையில் தமிழர்கள்மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்கள் அரசாங்கத்தின் இனப் படுகொலைத் திட்டத்தின் வெளிப்பாடே ஆகும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் வர்த்தகர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச பயங்கரவாதிகளான மொசாட்டிடமும், கினிமினியிடமும் அரசாங்க நிர்வாகத்தைக் கையளித்துள்ள ஜெயவர்த்தன அரசு உண்மையைச் சொல்லப்போன எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் நாடாளுமன்றத்திலிருந்து வெளியே தூக்கி எறியும் நிலைக்கு சர்வாதிகாரம் பெற்றுள்ளது.

நாட்டில் எந்தவித அசம்பாவிதம் நடைபெற்றாலும் வடபகுதிப் பயங்கரவாதிகளின் நடவடிக்கைதான் எனவெறுமனே கூறிவிட்டு தமிழர்கள்மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்குத் தருணத்தைத் தனக்குச் சாதகமாக்க அரசு இப்பவும் தயாராக இருப்பது யாவரும் அறிந்ததே.

அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்ற பஸ் கொலைகளுக்கும் கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கும் அரசு எந்தவொரு புலன்விசாரணையும் மேற்கொள்ளவில்லை.

குற்றவாளிகளைப் பாரெவரையும் கண்டறிய முயற்சிக்கவும் இல்லை.

ஆனால் வெறுமனே தமிழர்கள்மீது பழியைப் போட்டு இனக் கொலையைத் தொடர்வதே அரசின் வேலையாக இருக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாகப் பேச்சு வார்த்தை, சமாதானத் தீர்வு என்று இந்தியாவையும் சுதந்திரப் போராளிகளையும் ஏமாற்றிய இலங்கை அரசு இவ்வளவு காலத்திலும் சமாதானத் தீர்வுக்கு எந்தவொரு உருப்படியான தீர்வையும் முன்வைக்காதது அரசின் உண்மையான நிலைமையை வெளிப்படுத்துகின்றது.

—இவ்வாறு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

### மண்டைதீவில் பண்டிதர் நினைவு நூல்நிலையம்

மண்டைதீவு, ஏப்ரல் 28 யாழ் பொலிஸ்நிலையத் தாக்குதலில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பண்டிதர் நினைவாக நூல்நிலையம் ஒன்று மண்டைதீவில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நூல்நிலையத் திறப்புவிழாவில் இதுவரை எமது மண்ணை மீட்டு எடுப்பதற்குப் போரிட்டு வீரமரணம் எய்திய போராளிகளுக்கு தியாகதீபம் ஏற்றல் உருவப்படம் திரைநீக்கம் செய்தல் ஆகிய சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (இ-88)

# உப தபாலதிபர்கள் இருவருக்குப் பிரியாவிடை

கன்னாகம், ஏப்ரல் 28 பொதுமக்களை மதித்து உபசரிக்கும் அரச அதிகாரிகள் அருகிவிட்ட இன்றைய நிலையிலும் மக்கள் சேவகர்களாக தங்களை எண்ணி சேவை புரிந்த தபாலதிபர்களை ஏனையோரும் உதாரண புருஷர்களாகப் பின்பற்ற வேண்டும்.

சந்தரோடை உப தபாலதிபர் திரு. ஆ. சி. கணேசவேல் இவ்வாறு கூறினார்.

கன்னாகம் தபால் அலுவலகத்தில் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக சேவைசெய்து இடமாற்றம் பெற்றுச்செல்லும் உபதபால் அதிபர்கள் திரு. என் நடராசா, திரு சி பரமேஸ்வரன் ஆகியோருக்கு பொதுமக்களும், தபாலதிகாரிகளும் சேர்ந்து பிரியாவிடை உபசாரம் நடத்தினர்.

கன்னாகம் பிரதம தபால் அதிபர் திரு இ திருநாவுக்கரசு தலைமை வகித்தார்.

திரு. கணேசவேல், திரு. எஸ். மருதலிங்கம், திரு. இ. நல்லதம்பி திரு இ குலசிங்கம் உட்பட பேசிய பலரும் புதிய தபாலதிபர் செய்துவரும் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் அவற்றை நடைமுறைப்படுத்த உப தபால் அதிபர்கள் பிரதம தபாலதிபருடன் ஒத்துழைக்கும் சிறப்புப் பற்றியும் விவரித்தனர். (இ-27)

மண்டைதீவு பாடசாலை

# கட்டடவேலை ஆரம்பித்து இருவருடங்களாகியும் இன்னும் பூர்த்தி இல்லை

மண்டைதீவு, ஏப். 28 மண்டைதீவு மகாவித்தியாலய ஆரம்ப பிரிவுக் கட்டட வேலைகள் ஆரம்பித்து இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இன்றுவரை கட்டட வேலைகள் பூர்த்தி அடையவில்லை.

வேலைகள் அரைகுறையாக இருப்பது குறித்து இப்பகுதிப் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் கவலை அடைந்துள்ளனர்.

ஆறு வகுப்புக்களைக் கொண்ட இக்கட்டடத்தை அமைப்பதற்கு யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டது.

நீண்ட நாட்களாக இடவசதி இல்லாத மாணவர்கள் மாமர நிழலிலும் மண்டப தாழ்வாரங்களிலும் கல்வி கற்று வருகின்றார்கள்.

இக்கட்டட வேலைகளை உடன் முடித்து மாணவர்களின் இடவசதியின்மையை நிவிர்த்தி செய்யுமாறு இப்பகுதிப் பெற்றோர்கள் வடபகுதி கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-88)

### சுற்றுநிருபம்

வேலணை, ஏப். 28 யாழ்ப்பாண மாவட்டத்தில் சனசமூக நிலையங்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய நடைமுறைகள் சம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்று யாழ்ப்பாணப் பிரதேச உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளரினால் சகல சனசமூக நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றுநிருபத்தில் சனசமூக நிலையங்களின் நடைமுறைகள், பணிகள் பற்றிய விவரங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. (இ-167)

### அதிபர் நினைவாக வகுப்பறைக் கட்டடம்

மானிப்பாய், ஏப் 28 உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் சுமார் ஒரு லட்சம்ரூபா செலவில் புதிய வகுப்பறைக் கட்டடம் நிறுவப்பட உள்ளது.

இப்பாடசாலையின் அதிபராக இருந்து காலஞ்சென்ற திரு கா சின்னத்தம்பியின் ஞாபகார்த்தமாக இது நிறுவப்பட உள்ளது.

அன்னாரின் துணைவியாரும் இப்பாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியையுமான திருமதி அரிநேசராணி சின்னத்தம்பியும் அவரின் உறவினர்களும் இந்த வகுப்பறைக் கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளனர். (இ-90)

### கல்வி நிவாரண நிதி உதவி

பருத்தித்துறை, ஏப். 28 யாழ் அரசினர் வைத்தியசாலையில் இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல்லுக்குப் பலியான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் சுப்பிரமணியத்தின் மகனுக்கு கல்வி நிவாரண நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இவரின் மகன் செல்வன் ச. சத்தியசீலன் யாழ் இந்துக்கல்லூரியின் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பில் கல்வி கற்கின்றார்.

இவருக்கான கல்வி நிவாரண நிதியுதவி (அடுத்தமாதம்) மே மாதம் 6-ந் திகதி கல்லூரியில் வைத்து பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தாஜியினால் வழங்கப்படும். (இ-118)

# அகதிகளுக்கு உதவி புரிவது எமது கடமை

## அங்குரார்ப்பண விழாவில் உரை

வட்டுக்கோட்டை, ஏப். 28 இராணுவத்தினரின் தாக்குதல் முயற்சிகளினால் தமது வீடுகளில் இருக்கமுடியாது அகதிகளாக இடம்பெயர்ந்து வருவோருக்கு ஆதரவளித்து அவர்களுக்கு உணவு உடையும் உறைவிடமும் ஏற்படுத்திக் கொடுப்பது தமிழ் மக்களாகிய எமது கடமை ஆகும்.

சங்கானை பட்டின சபை பொது நூலகத்தில் நடைபெற்ற அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு அங்குரார்ப்பண விழாவில் உரையாற்றிய தமிழ் மாவீர் அவையைச் சேர்ந்த இரா. முருகையா மேற்கண்டவாறு கூறினார்.

சங்கானையில் வெளியிடங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு ஒன்று அமைப்பாளர் திரு க. உபேந்திரன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இரா. முருகையா தொடர்ந்து உரையாற்றுகையில் கிராம மட்டத்தில் ஏற்படும் சேவை வாய்ப்புகளை அகதிகளுக்கு வழங்கி அவர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை ஓரளவு நிவர்த்தி செய்ய நாம் அனைவரும் முன்வரவேண்டும்.

அகதிகளுக்கென பல திட்டங்களை வகுத்து அவர்கள் மூலம் அதனை செயற்படுத்தி பொருளாதாரத் துறையில் அவர்களை முன்னேற்றுவதற்கும் நாம் முயற்சிக்க வேண்டும்.

அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் மூலம் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவதே சிறந்த முறை ஆகும்.

தனிப்பட்ட முறையிலும் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் மூலமும் உதவிகள் செய்வதைவிட இது போன்ற அமைப்புக்கள் மூலம் உதவி புரிவது பயனுள்ளதாக அமையும் என நம்புகிறேன் என்றார். (இ-161)

### ஊரெழுவில் விமர்சன அரங்கு

கன்னாகம், ஏப் 28 மேற்கு ஜெர்மனியில் வெளியிடப்பட்ட பார்த்திபனின் 'நிஜங்கள்' சிறுகதைத் தொகுதியின் விமர்சன அரங்கு அண்மையில் ஊரெழு மதி அக்கடமி மண்டபத்தில் நடைபெற்றது.

மாவும் அனுசரணையுடன் நடந்த இவ்விழாவுக்கு மகவம் தலைவர் திரு. வேல் அமிர்தன் தலைமை வகித்தார்.

ஊரெழு சரவணமுத்துப்புலவர் நினைவு உரையை திரு ச. முத்துக்குமாரசாமி நிகழ்த்தினார். செல்விகள் சோ. தர்ஷினி, அ. மதினி ஆகியோர் 'நிஜங்கள்' சிறுகதைகளை வாசித்தனர். (இ-27)

### அராலித்துறை பால வேலைகள் பொதுமக்கள் உதவி

புங்குடுதீவு, ஏப் 28 அராலித்துறை பாலவேலைகளுக்குப் பொதுமக்களின் உதவியும் கோரப்பட்டுள்ளது.

அராலித்துறையின் தென்பகுதித் துறைமுக மேடையை விஸ்தரிக்கும் பணியில் பாதை அமைப்புக்குழு ஒன்று தற்போது ஈடுபட்டுள்ளது.

இக்குழுவினர் இத்துறைமுகம் வழியாகப் பயணம் செய்யும் பயணிகள் ஒவ்வொருவரிடமும் ஒருரூபா வீதம் நிதி சேகரித்து வருகின்றனர்.

இப்பாதை வழியாக தினசரி மூவாயிரத்துக்கு மேற்பட்ட பயணிகள் பிரயாணம் செய்கின்றனர். (இ-131)

# தோலகட்டி ஆச்சிரமத்திலிருந்து படைகள் வாபஸாக வேண்டும்

## ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஏப். 28 தோலகட்டி ஆச்சிரமத்தில் நிலைகொண்டுள்ள படைகள் வாபஸ் பெறப்படவேண்டும்.

இதன்மூலம் ஆச்சிரமத் துறவிகள் தமது நாளாந்த செயற்பாடுகளைத் தொடர வழிசெய்யவேண்டும்.

யாழ் மறைமாவட்ட நீதி சமாதான அபிவிருத்தி ஆணைக்குழு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அம்மகஜரில் தோலகட்டி செபமாலைத்தாசர் ஆச்சிரமத்தில் இவ்வருடம் மார்ச் 5ஆம் திகதி முதல் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்

இந்த ஆச்சிரமம் 1928 ஆம் ஆண்டு அருட்திரு தோமஸ் அடிகளாரால் ஸ்தாபிக்கப்பட்டது.

கிழக்காசியாவில் தபசெப வாழ்க்கைக்காக முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட துறவிகள் சபை இதுவாகும்.

சபைக்குரிய ஒரு கோவிலும் துறவிகளை அடக்கம் செய்த ஓர் சேமக்காலையும் இங்கே உண்டு

இந்த சேமக்காலையிலேயே ஆச்சிரம ஸ்தாபகரின் பூதவுடல் புனித நினைவுகளுடன் வைக்கப்பட்டுள்ளது.

துறவிகளின் வாழ்க்கைத் தேவைக்கென கருவாக்கப்பட்ட பண்ணையும், கைத்தொழிற்சாலைகளும் அங்கே உண்டு

அங்குள்ள ஆலயத்தில் இடைவெளி இல்லாத தொடர் பிரார்த்தனை தினமும் இடம்பெறும்.

தமது ஆத்ம, உடல் தேவைகளுக்காக பெரும் எண்ணிக்கையான மக்கள் தினமும் அங்கே யாத்திரை செல்வது வழக்கம்.

இவ்வாறு மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ எ)

### எள்ளு உற்பத்திக்கு ஊக்குவிப்பு

வட்டுக்கோட்டை, ஏ 28 சங்கானைப் பகுதியில் வெள்ளை எள்ளு உற்பத்தி செய்வதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இறுங்கிய உற்பத்தி ஊக்குவிப்பை விஸ்தரிக்கு நோக்கமாக பெருவிலைக்கு கொடுக்கக் கூடிய வெள்ளை எள்ளை உற்பத்தி செய்வதில் சங்கானைப் பகுதி விவசாயிகள் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என சங்கானை விவசாயப் பிரிவு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. சிதம்பரநாதன் ஜி விவசாயிகளிடம் வலியுறுத்திவருகிறார். (உ-161)

# சிறுவயதிலேயே மாணவர் சொல்வளத்தைப் பெருக்கவேண்டும்

மானிப்பாய், ஏப். 28 மாணவர்கள் தம் சிறுவயதிலேயே சொல்வளத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும். தினமும் ஒரு குறிப்பிட்டளவு நேரம் ஏதாவது ஒரு பொருளைப் பற்றி பேசிப்பழக வேண்டும்.

உடுவில் கல்வி அபிவிருத்திச் சமூகத்தின் இலக்கிய மன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும், கல்விவளர்ச்சிச் சமூகத் தலைவருமான திரு. பி. எஸ் குமாரசாமி மேற்கண்டவாறு கூறினார்

உடுவில் கல்வி வளர்ச்சிச் சமூகத்தின் இலக்கிய மன்றக் கூட்டம் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

செல்வி வனஜா கூட்டத்துக்குத் தலைமைவகித்தார்.

திரு. பி. எஸ் குமாரசுவாமி மேலும் பேசுகையில் வாசிக்கும் பழக்கத்தை வைத்தொல்லுவதுடன், அறிவாளிகள் கல்விமான்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

அவர்களின் கருத்துக்களையும் சிந்தனைகளையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

மாணவர்களின் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் வாசிக்கப்பட்டன.

நகைச்சுவை நாடகமும் இடம்பெற்றது. (இ-90)

### ஒரு ரூபா கட்டணம்

வேலணை, ஏப்ரல் 28 அராலிப் பாதை அமைப்பு வேலைகளுக்காக அராலிப் பாதை அமைப்புக் குழுவினால் இந்தப் பாதையினூடாகப் பயணம் செய்யும் பயணிகளிடம் இருந்து தலா ஒருரூபா தற்பொழுது அறவிடப்பட்டு வருகின்றது. (உ-167)

மக்கள் முகம்

### வட இலங்கை ஹோமியோபதி சங்கம்

மானிப்பாய், ஏப் 28 வட இலங்கை ஹோமியோபதி சங்கத்தின் 28 ஆவது வருடாந்தக் கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது

டாக்டர் க. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் டாக்டர் க. கிருஷ்ணசாமி உபதலைவர்கள் டாக்டர் எம். ஏ. ருசல், டாக்டர் என். ரி. புவிராஜன் செயலாளர் டாக்டர் எம் வேலுப்பிள்ளை

உபசெயலாளர் டாக்டர் டி ஏ மத்தியூஸ் பொருளாளர் டாக்டர் எஸ் சிவனேசன் கணக்குப் பரிசோதகர் டாக்டர் திருமதி ஆர். பரமேஸ்வரி

நிர்வாக உறுப்பினர்கள் டாக்டர் வி. பி. சுந்தரராயா, டாக்டர் எஸ் மோசஸ், டாக்டர் என். ஞானசீலன் டாக்டர் ஏ சுந்தரலிங்கம், டாக்டர் எஸ். ரி பூரணேஸ்வரன், டாக்டர் டி ஜி எம். ஜோசேப், டாக்டர் ஆர். பரமசாமி டாக்டர் எஸ். குலசேகரம், டாக்டர் என். ஈ ஆர். இராஜசீலன் டாக்டர் செல்வி என். தனபால சரஸ்வதி, டாக்டர் செல்வி அனுஷா சுப்பிரமணியம், டாக்டர் செல்வி பரமேஸ்வரி டாக்டர் திரு [illegible] டாக்டர் திருமதி கே. ஞானசக்தி. (இ-90)


யாழ். ஆஸ்பத்திரி

இரத்த வங்கி

உங்கள் சேவையை எதிர்பார்த்து நிற்கிறது!
இரத்த தானம் செய்யுங்கள்!
விரைந்து செய்வீர்!!
தொடர்ந்து செய்வீர்!!!
தானத்தில் சிறந்தது இரத்ததானம்

உயிர் காக்கும் சஞ்சீவி

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத, திரும்பப் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்

உயிர் காப்பது உன்னத பணி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

மனிதன் பாரம்பரியத்தைக் கொண்டு நியாயத்தை உரைத்துப் பார்க்கலாகாது; நியாயத்தைக் கொண்டு பாரம்பரியத்தை உரைத்துப் பார்க்கலாகாது.

— டால்ஸ்டாய்


உதயன்

இல, 15, கஸ்தூரியார் வீதி, தொலைபேசி: 24808 மின்சார நிலைய வீதி, 23078 யாழ்ப்பாணம் 28-04-1987 த.பெ.இல. 88


# அவசர முதலுதவிப் பிரிவு கிராமங்களிலும் வேண்டும்

யாழ் நகரில் அவசர முதலுதவிப்பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. முதலுதவிப் பிரிவின் அவசியத்தை உணர்ந்து, சமயோசிதமாக அதனை உருவாக்கிய யாழ் மாநகர ஆணையாளர் திரு சி வி கே. சிவஞானம் பாராட்டுதலுக்கு உரியவர்.

நாட்டுக்கு நாடு எதிராக நடத்தும் யுத்தத்தை விடத் தீவிரமான யுத்தம் இப்போது தமிழ்ப் பகுதிகளில் நடைபெறுகிறது. இதுவரை பிரகடனப்படுத்தாத யுத்தத்தை நடத்தி வந்த ஸ்ரீலங்கா அரசு, இப்போது யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது யுத்தத்தைப் பிரகடனப்படுத்தி நடத்துகிறது. அதுவும் வானத்தாக்குதல் மூலம் குடாநாட்டை அழிக்கத் தனது படைகளுக்கு அரசாங்கம் பூரண அனுமதி வழங்கி இருக்கிறது.

வானத் தாக்குதல் எப்போது நடக்கும், எங்கே நடக்கும் என்பது எவருக்கும் தெரியாது. திடீரென ஹெலி வரும்; பொம்மர் வரும். தாம் நினைத்த இடத்தில் தாக்குதல் நடத்தும், குண்டு வீசும். எரிகுண்டுகள், பெற்றோல் குண்டுகள், டயர் குண்டுகள், நேபாம் குண்டுகள் என்று பல நவீன குண்டுகள் வானத்தாக்குதலின் போது வீசப்படுகின்றன. அதன் விளைவாக அப்பாவிப் பொது மக்கள் அவமே சாகிறார்கள். வீடுகள், உடைமைகள் சேதம் அடைகின்றன. வீடுகள், கட்டடங்கள் தீக்கு இரையாக்கிப் பொசுக்கப்படுகின்றன.

இதுபோன்ற காலங்களில் மீட்புப்பணி, முதலுதவி ஆகியன அத்தியாவசியமாகின்றன.

தாக்குதலில் அப்பாவி மக்கள் உயிரிழப்பு ஒருபுறமிருக்க, பலர் காயமடைவதுமுண்டு. காயம் அடைந்தவர்களை, கட்டட இடிபாடுகளுக்குள் அகப்பட்டு உயிருடன் போராடுபவர்களை மீட்டு உரிய நேரத்தில் சிகிச்சை அளிப்பதால் அவர்களின் உயிரைக் காப்பாற்ற முடியும்.

ஆபத்தில் சிக்கியவர்களை மீட்பது, முதலுதவிச் சிகிச்சை தேவைப்படின் அதனை வழங்கி ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் சென்று சிகிச்சைக்கு அனுமதிப்பது என்பன தாக்குதல்கள் நடந்த ஒரு சில நிமிட நேரத்தில் செய்யப்பட வேண்டியவை ஆகும்.

அதனைச் செய்வதற்குப் பலர் விரும்பப்படுவர். ஆனால் மனப் பலம் ஏற்படக்கூடிய வேளைகளில் மீட்புவேலை, முதலுதவி, சிகிச்சைக்கு அனுமதித்தல் ஆகிய பணிகளை எல்லோராலும் சரிவரச் செய்யமுடியாது. அதற்கெனப் பயிற்சி பெற்றவர்களாலேயே நேரத்துக்கு ஏற்றவாறு தேவைக்கு ஏற்றவாறு உதவ முடியும்.

செஞ் ஜோன் முதலுதவிப்படை, திரிசாரணர் இயக்கம் ஆகியவற்றில் ஆபத்து வேளையில் உதவும் பயிற்சிகள் வழங்கப்படுவது உண்டு.

அவர்களைக் கொண்ட அவசர முதலுதவிப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டிருப்பது புதியவர்களை ஆட்சேர்த்து பயிற்சி அளிக்கும் கால தாமதத்தை உடனடியாகத் தவிர்த்திருக்கிறது எனலாம்.

அவசர முதலுதவிச் சிகிச்சைப் பிரிவு செயற்படும் பட்சத்தில் தாக்குதலால் பாதிக்கப்பட்ட இடத்துக்கு, தேவையற்ற விதத்தில் எல்லோரும் சென்று மேலும் பலர் ஆபத்தை விலைக்கு வாங்குவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

யாழ். நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அவசர முதலுதவிப் பிரிவு திட்டமிட்ட முறையில் இயங்க இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்கள் நடந்த இடங்களுக்குச் செல்லும் முதலுதவித் தொண்டர்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்து பின்வரும் பணிகளைச் செய்வர் என்று அறிவிக்கப்படுகிறது.

- ✱ ஒரு குழு இடிபாடுகளுக்குள் அகப்பட்டுத் தவிக்கும் மக்களை மீட்கும் பணியில் ஈடுபடும்.
- ✱ இரண்டாவது குழு மீட்கப்பட்டவர்களுக்கும், காயப்பட்டவர்களுக்கும் முதலுதவிச் சிகிச்சை செய்வதோடு ஆபத்தான நிலையில் உள்ளவர்களை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கும் அனுமதிக்கும்.
- ✱ மூன்றாவது குழு பாதிக்கப்பட்ட இடங்களில் உடைமைகளைப் பாதுகாப்பதிலும், வீதி ஒழுங்குப் பணிகளைச் செய்வதிலும் ஈடுபடும்.

இந்தத் திட்டம் பயனுள்ள முறையிலும் விரைவாகவும் செயற்படுத்த உசிதமானதாகும்.

நகரில் பாதிக்கப்படும் எல்லா இடங்களிலும் அவசர முதலுதவித் தொண்டு செய்யப்படும் விதத்தில் பிரிவு விரிவாக இயங்குவது பிரதானம். ஒரே நேரத்தில் பல இடங்களில் தாக்குதல்கள் நடக்கும் போது, பரந்து சென்று பணியுரியப் பல தொண்டர்கள் தேவைப்படுவர்.

எனவே அவசர முதலுதவிப் பணிகளில் பலருக்குப் பயிற்சி அளிப்பது குறித்தும் ஆலோசிக்க வேண்டும்.

இது போன்ற முதலுதவிப் பிரிவுகள் கிராமந்தோறும் நிறுவப்படுமானால் பல நூற்றுக் கணக்கான உயிர்களைக் காப்பாற்றலாம்.

பிரசைகள் குழுக்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் இளைஞர் சங்கங்கள் ஒருங்கிணைந்து கிராம மட்டத்தில் அவசர முதலுதவுப் பிரிவுகளை ஆரம்பித்து நடத்த உடன் நடவடிக்கை மேற்கொள்வது மிக அவசியமானதாகும்.

இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள

# பங்களாதேஷ் அகதிகளை திருப்பி அழைக்குக

## இந்தியா கோரிக்கை

டாக்கா, ஏப்ரல் 27

இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள சுமார் அரை லட்சம் சக்மா இன அகதிகளை திருப்பி அழைக்க நடவடிக்கை எடுக்கும்படி இந்தியா பங்களாதேஷைக் கேட்டிருக்கிறது.

சக்மா அகதிகள் திரும்பிச் சென்று குடியமரக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவது பங்களாதேஷின் கடமை என்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

டாக்காவில் இரண்டு தினங்களாக நடைபெற்ற இரண்டு நாடுகளின் வெளியுறவுச் செயலாளர் மட்ட மாநாட்டில் இக்கோரிக்கைகளை இந்தியா முன்வைத்தது.

பங்களாதேஷின் வடமாநிலத்தில் சக்மா இன மக்கள் வாழும் பகுதியில் கூடுதல் சுயாட்சி கோரி சாந்தி வாஹினி கிளர்ச்சியாளர்கள் போராடி வருகின்றனர்.

இதற்கு எதிராக பங்களாதேஷ் அரசு இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது.

இதன் காரணமாக இடம்பெறும் மோதல்களுக்கு அஞ்சி இதுவரை சுமார் 50,000 சக்மா அகதிகள் இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதனிடையில் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள சக்மா அகதிகளின் எண்ணிக்கை சுமார் 27 ஆயிரமே என்றும் இந்தியா கூறுவது போன்று அரை லட்சம் அல்ல என்றும் பங்களாதேஷ் கூறியுள்ளது.

சாந்தி வாஹினி கிளர்ச்சியாளர்களுக்கு இந்தியா உதவி அளித்து வருகிறது என்ற குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளது.

டாக்காவில் நடைபெற்ற மாநாட்டில் இந்திய வெளியுறவுச் செயலாளர் கே பி எஸ் மேனனும் பங்களாதேஷ் வெளியுறவுச் செயலாளர் பஃருதீன் அஹமதும் கலந்து கொண்டனர். (இ-எ)

**வெளி உலகில்**

## பிரெஞ்சு - பிரிட்டிஷ் பிரதமர்கள் சந்திப்பு

லண்டன், ஏப். 27

ஐரோப்பாவில் இருந்து குறைந்த, நடுத்தர அணு ஏவாயுதங்களை விலக்கிக் கொள்வது சம்பந்தமான ரஷ்யாவின் யோசனைகள் பற்றி பிரெஞ்சுப் பிரதமர் சிறாக், பிரிட்டிஷ் பிரதமர் மார்கரெட் தாட்சருடன் ஞாயிற்றுக்கிழமை பேச்சுக்களை நடத்தினர்.

தென் லண்டனில் உள்ள திருமதி தாட்சரின் வாசஸ்தலத்தில் இச் சந்திப்பு மூன்றுமணி நேரம் வரையில் நடைபெற்றது.

ஐரோப்பாவின் பாதுகாப்புக்கு அணு ஆயுதங்களை ஐரோப்பிய நாடுகள் வைத்திருக்க வேண்டும் என்று பிரெஞ்சுப் பிரதமர் சிறாக் பிரிட்டிஷ் பிரதமரிடம் வலியுறுத்தினார்.

ரஷ்யத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவுடன் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை பிரதமர் தாட்சரும் பிரெஞ்சுப் பிரதமரிடம் விளக்கினார். (இ-எ)

## பிறேஸிலின் நிதி நெருக்கடி; நிதி அமைச்சர் ராஜினாமா!

பிரஸ்சல்ஸ், ஏப், 27

பிறேஸிலின் நிதி அமைச்சர் பினேரோ நேற்று இராஜினாமாச் செய்துவிட்டார்.

நாட்டின் நிதிநிலைமை மிகவும் மோசமடைந்ததைத்தொடர்ந்து அவரை இராஜினாமாச் செய்யும்படி வங்கித் தலைவர்கள், பிரமுகர்கள் வேண்டுகோள்கள் விடுத்து இருந்தனர்.

வெளிநாடுகளில் இருந்து மட்டும் பிறேஸில் நூறுகோடிடாலர் கடனுகப் பெற்றிருக்கிறது.

இக்கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத அளவுக்கு பிறேஸிலின் நிதி நிலைமை மோசமடைந்துள்ளது. (இ-எ)

**சோவியத் மக்கள் அரசியல் ஆர்வம்**

சோபியா, ஏப் 27

திரு கோர்பச்சேவ் தலைவராகப் பதவி ஏற்ற பின்னர் சோவியத் மக்கள் அரசியலில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

இப்படி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

பல்கேரியாவுக்கு விஜயஞ்செய்துள்ள கம்யூனிஸ்ட் தூதுக்குழுவின் தலைவர் செர்கோவ் என்பவரே இத்தகவலை வெளியிட்டார்.

திரு கோர்பச்சேவ் தலைமையின்கீழ், ரஷ்யாவில் உற்பத்தி அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

## சிரியாவுடன் தம்மைச் சமரசம் செய்து வைக்குமாறு அரபாத் கோருகிறார்

அல்ஜியர்ஸ், ஏப். 27

சிரியாவுக்கும் தமக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்தி வைக்கும் படி பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யாசிர் அரபாத் அல்ஜீரியாவைக் கேட்டு இருக்கிறார்.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரே அரபாத் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் நிலவிய கருத்து வேறுபாடுகள் நீக்கப்பட்ட நிலையில் அரபாத் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்.

சிரியாவுடன் பலஸ்தீன விடுதலை இயக்கம் நெருங்கிய உறவுகளை வைத்து இருக்க வேண்டும்; அதே நேரத்தில் எகிப்துடனான உறவுகள் ஒரு வரையறைக்குள் இருக்க வேண்டும் —

இந்த அடிப்படையில் கருவான சமரசத் திட்டத்துக்கு அரபாத் ஒப்புதல் அளித்த பின்னரே பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் உட் சண்டை ஒரு முடிவுக்கு வந்தது.

தமக்கும் சிரியாவுக்கும் இடையேயான பிணக்கு சகோதரர்களுக்கு இடையேஏற்படும் மனஸ்தாபம் போன்றது என்று யாஸிர் அரபாத் தெரிவித்தார். (இ-எ)

நாஸிக் குற்றவாளி

## ருடோல்ப் ஹெஸ்ஸை விடுதலை செய்யக் கோரி பெர்லினில் ஆர்ப்பாட்டம்

பெர்லின், ஏப்ரல் 27

சிறையில் கடந்த 46 ஆண்டுகளாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நாஸி கைதி ருடோல்ப் ஹெஸ் என்பவரை விடுவிக்கும்படி கடந்த ஞாயிறு மேற்கு பெர்லினில் 500 பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஜேர்மன் சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லரின் இரண்டாவது உதவியாளராகப் பணி புரிந்தவர் ருடோல்ப் ஹெஸ்.

அண்மையில் 93 ஆவது பிறந்த தினத்தை ஸ்பான்டு சிறையில் கொண்டாடினார்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது இடம்பெற்ற யூதப் படுகொலைகள் தொடர்பாக இவர் ஸ்பான்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்.

சிறையில் இவர் மட்டுமே காவலில் வைக்கப்பட்டு இருக்கிறார். மேற்கு ஜெர்மன், ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளின் படைகள் இச்சிறையைக் காவல் புரிந்து வருகின்றன.

மனிதாபிமான அடிப்படையில் இவரை விடுதலை செய்ய மேற்கு ஜெர்மன், பிரான்ஸ், பிரிட்டன் ஆகியன விருப்பம் தெரிவித்துள்ளன.

ஆனால் ரஷ்யா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்திருக்கிறது.

திரு கோர்ப்பச்சேவ் பதவிக்கு வந்த பின்னர். இவரை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கு ரஷ்ய வட்டாரங்களில் ஆதரவு ஏற்பட்டு வருகிறது. (இ-எ)

## இராணுவ அதிகாரிகளுக்கு மன்னிப்பு இல்லை

புவனர்ஸ், ஏப். 27

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்கான இராணுவ அதிகாரிகளுக்கு ஆர்ஜன்ரீன அரசு மன்னிப்பு வழங்காது.

ஆளும் கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

இராணுவத்தினர் அண்மையில் நடத்திய கிளர்ச்சியைத் தொடர்ந்து மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு இலக்கான இராணுவ அதிகாரிகளுக்கு மன்னிப்பு வழங்கப்படப்போகிறது என்ற தகவலை இவர் முற்றாக மறுத்தார்.

மன்னிப்பு வழங்கும் எத்திட்டத்தையும் ஆளும்கட்சி ஆதரிக்காது; ஜனாதிபதி அல்போன்ஸினும் அதனை ஏற்க முற்படமாட்டார் - இப்படி அந்த சிரேஷ்ட தலைவர் தெரிவித்தார். (இ-எ)

கிளிநொச்சி:

# கிராமசேவையாளர் பிரிவுகள் 19 ஆக அதிகரிப்பு

கிளிநொச்சி, ஏப்ரல் 28

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 12 கிராம சேவையாளர் பிரிவுகள் நவம்பர் மாதம் முதல் 19 பிரிவுகளாக மாறும்.

விசேஷ சேவை உத்தியோகத்தர்களை கிராம சேவகர்களாக மாற்றும் திட்டத்தின் அடிப்படையிலேயே இப்பிரிவுகள் நடைமுறைக்கு வருகின்றன.

இதன்படி தற்போது ஒரு கிராம சேவகர் பிரிவாக இருக்கும் கிளிநொச்சி கிராம சேவகர் பிரிவு ஐந்து பிரிவுகளாகவும் உருத்திரபுரம் கிராம சேவகர் பிரிவு இரண்டு பிரிவுகளாகவும் அக்கராயன் கிராம சேவகர் பிரிவு இரண்டு பிரிவுகளாகவும் வட்டக்கச்சி - இராமநாதபுரம் கிராம சேவகர் பிரிவுகள் மூன்று கிராம சேவகர் பிரிவுகளாகவும் வகுக்கப்படும்.

இதனால் முன்பிருந்த 12 பிரிவுகளுடன் ஏழு புதிய பிரிவுகள் உருவாக்கப்படும்.

இப்புதிய பிரிவுகளில் மிகக் கூடுதலான சனத்தொகையான சுமார் 80 ஆயிரம் மக்களைக் கொண்ட கிளிநொச்சி கிராம சேவகர் பிரிவு ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் கிளிநொச்சி நகரம் ஒரு கிராம சேவகர் பிரிவாகவும் பாரதிபுரத்தை உள்ளடக்கிய பாரதிபுரம் ஒரு கிராம சேவகர் பிரிவாகவும் கணேசபுரத்தை உள்ளடக்கி கணேசபுரம் ஒரு கிராம சேவகர் பிரிவாகவும் கனகபுரத்தை உள்ளடக்கி கனகபுரம் ஒரு கிராம சேவகர் பிரிவாகவும் திருவையாறு பகுதியை உள்ளடக்கி திருவையாறு ஒரு கிராம சேவகர் பிரிவாகவும் அமையும்.

இவை அனைத்தும் கடந்த காலத்தில் ஒரு கிராம சேவகரால் நிர்வகிக்கப்பட்டன. (இ-76)

# தாக்குதல் மூலம் தமிழரை அடிபணிய வைக்க முடியாது

## மே தினம் அதனை எடுத்துக் காட்டுவதாக அமையவேண்டும்

யாழ்ப்பாணம், ஏப் 28

தமிழ் மக்கள் தாக்குதல் மூலம் அடிபணிய மாட்டார்கள் நடைமுறைச் சாத்தியமான ஒரு அரசியல் தீர்வையே வலியுறுத்துகின்றார்கள் என்பதை மக்கள் தமது ஒற்றுமையான எழுச்சி மூலம் எடுத்துக்காட்ட வேண்டும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டச் செயலாளர் திரு. சி. விஜயானந்தன் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்முறை நடைபெறவுள்ள மேதினத்தில் அனைவரும் ஐக்கியப்பட்டு கூட்டத்திலும், ஊர்வலத்திலும் வந்து கொண்டு எமது ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பேரினவாத அரசுக்குக் காட்ட வேண்டும்.

மிலேச்சத்தனமான விமானத் தாக்குதல்கள் மூலம் தமிழ் மக்களை அடிபணிய வைக்கலாம் என அரசு கற்பனை செய்கிறது.

எமது சொந்த மண்ணிலே அகதிகளாக்கப்பட்டுள்ள எம் மக்கள் எமது உரிமையை நிலைநாட்டவும் எமது கண்டனத்தை வெளிப்படுத்தவும் இந்த ஐக்கிய மே தினத்தில் பங்கு கொள்வோம்.

[illegible] இன்று இனம், மதம், சாதி, சமயம் போன்ற [illegible] கப்பட்டுள்ள மக்களையும் அரவணைத்துள்ளது.

இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-எ)

### வல்வை பிரசைகள் குழு வேண்டுகோள்

வல்வெட்டித்துறை, ஏப் 28

ஷெல் தாக்குதல், விமானத் தாக்குதல் நடைபெறும் இடங்களுக்கு உடனே செல்ல வேண்டாம்.

இப்படி வல்வை பிரசைகள் குழுத் தலைவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தாக்குதல் நடைபெறும் இடங்களுக்குச் சென்றவர்கள் உயிர் ஆபத்துக்கு இலக்காகி இருக்கின்றனர்.

பிரசைகள் குழுத்தலைவர் பொதுமக்களுக்கு விடுத்த வேண்டுகோளில் இப்படித் தெரிவித்துள்ளார். (இ-எ)

**வாசகர் திருமுகம்**

### தூர்ந்து போன நிலையில் மதகு

ஈச்சமோட்டை வீதியில் இருஷ்ணபிள்ளை வீதிக்குத் திரும்பும் இடத்தில் உள்ள மதகு பல மாதங்களாக உடைந்து சேற்ற நிலையில் உள்ளது.

இப்பாதையால் இரவில் சைக்கிளில் வருபவர்கள் அநேகர் விபத்துக்குள்ளாகியும் உள்ளார்கள். வாகனங்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் வீதி உள்ளது.

அத்துடன் ஈச்சமோட்டை [illegible] வாய்க்காலும் தூர்ந்து [illegible] மழைநீர் ஓட முடியாத நிலை. [illegible] வீதியை மேவிநிற்கும். இதனால் வீதியும் சேதமடையும் சுகாதாரக் கெடுதியுண்டு.

**செய்திக்கொத்து**

### ஓய்வுபெறுகிறார்

கிளிநொச்சி ஏப்ரல் 28

அரசாங்க சுகாதார சேவையில் கடமையாற்றி சுமார் 35 வருட சேவையை முடித்துக் கொண்டு ஓய்வு பெறுகிறார் இராமலிங்கம் ஜெரூட் கீத பொன்னையலன் (இ-76)

### ஆலய முன்றலில் நாடகம்

கிளிநொச்சி, ஏப். 28

தும்பளை நெல்லண்டை ஸ்ரீபத்திரகாளி ஆலய முன்றலில் கடந்த வாரம் தும்பளை கலைமகள் நாடக மன்றத்தினரின் சத்தியவான் சாவித்திரி, மயான காண்டம், எஸ் ஜெயக்குமாரின் நடனம் என்பன வெகு விமரிசையாக நடைபெற்றன. (இ-76)

### வெற்றிடம்

கிளிநொச்சி, ஏப். 28

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போது மூன்று கிராம சேவகர்கள், ஒரு விசேஷ சேவை அலுவலர் ஆகியோரது பதவிகள் வெற்றிடமாகவுள்ளன.

ஊரியான், கண்டாவளை, பரந்தன் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும், வட்டக்கச்சி, இராமநாதபுரம் விசேட சேவை அலுவலர் பிரிவுமே தற்போது வெற்றிடமாக உள்ளன. (இ-76)

### கட்டடம் புனரமைப்பு

வட்டுக்கோட்டை, ஏப்ரல் 28

சங்கானை இழக்கு தொட்டிலடி சனசமூக நிலையக் கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது விரைவில் இக் கட்டடத் திறப்பு விழா நடைபெறும். (இ-161)

### குடிதண்ணீர்க் குழாய் பழுது

வட்டுக்கோட்டை, ஏப் 28

பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவிலை அடுத்துள்ள பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் விநியோகக் குழாய்கள் பழுதடைந்த காரணத்தினால் சரியான முறையில் குடிதண்ணீரைப் பெறமுடியாது இங்குள்ள மக்கள் கஷ்டமடைகின்றனர்.

குடிதண்ணீர் பெற்றுக்கொள்ள உதவுமாறு மாவட்ட அபிவிருத்திச் சபை கழிபுரம் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரைக் கோவில் வழிபாட்டு வோர்சபைச் செயலாளர் திரு கே. சந்திரராசா கேட்டுக்கொண்டுள்ளார். (இ-161)



**பொய்யாமொழி**

குறள்

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

பொருள்

தக்க வழிகளையே ஆராய்ந்து கூறும் அறிஞரையே உலகம் கண்ணாகக் கொண்டு நடத்தலால், மன்னனும் அத்தகையாரை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

A/L 89 (விஞ்ஞானம்)
(பிரிவு 2)
சௌந்தி B Sc (Hons) | செல்வா (B. Sc. Hons)
ஏப்ரல் 25 இல் ஆரம்பம்
காலை 10-00 மணி
Niru Tuition Centre
KONDAVIL

# உதயன்

28 · 04 · 1987 செவ்வாய்க்கிழமை

மே 5 இல்
O/L Day Class (பிரிவு 4)
* முற்றிலும் பாடசாலை போன்ற வசதியில் கல்வி கற்பிக்கப்படும்.
காலை 8-00 -- 1-30 வரை
* கல்வியின் தரத்திற்கு கடந்தகால பெறுபேறுகள் சான்றுகும்
நிரு டியூசன் சென்ரர்
கோண்டாவில்.

## ஜனதிபதி அறிவிப்பு:

# அரசியல் தீர்வு தோல்வி

# ராணுவ முயற்சியே வழி

## அதற்கு ஒத்துழைப்பும் கேட்கிருர்

கொழும்பு, ஏப் 28 அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் தோல்வி கண்டு இராணுவ நடவடிக்கையில் அரசு ஈடுபடும்போது அதற்கு ஏனைய ஜனநாயக சக்திகள் ஒத்துழைப்பு தர வேண்டும்.

இப்படி ஜனதிபதி ஜெயவர்த்தன காத்தெனியாவில் தெரிவித்தார்.

அபிவிருத்தித் திட்டங்கள் சிலவற்றைத் திறந்து வைத்த பின்னர் ஜனதிபதி பொதுக் கூட்டம் ஒன்றில் பேசினர்.

ஜனதிபதி ஜெயவர்த்தன மேலும் சொன்னதாவது:-

தேசத் தலைவர்கள், மதத் தலைவர்கள் பெற்றுத் தந்த சுதந்திரத்துக்கு நான் துரோகம் செய்யமாட்டேன்.

இன்றைய நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மை உண்டு இவ்வளவு பலம் பொருந்திய அரசு ஒன்றினல் தான் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க முடியும்.

இனிவரும் தேர்தல்கள் விகிதாசார அடிப்படையிலே நடைபெறும். அப்போது ஆட்சிக்கு வரும் கட்சிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைப்பதே பெரும் கஷ்டமாக இருக்கும். அப்படி பலவீனமான ஆட்சி ஒன்று கருவாளும் பயங்கரவாதத்தை ஒழிப்பது மிகவும் கஷ்டமான காரியமாக இருக்கும்

இப்படி திரு ஜெயவர்த்தன தெரிவித்தார்.

(இதே கூட்டத்தில் திரு. ஜெயவர்த்தன ஆற்றிய உரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது தெரிந்ததே) (உ-ச)

### நீர்வேலி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ப்படுகின்றன.

மின் கம்பிகளும் அறுந்து காணப்படுகின்றன.

தோட்டமொன்றில் வாழைமரங்களும், தென்னை மரங்களும் நாசமடைந்தன.

இரண்டு நாள் இடைவெளியின் பின்பு நடைபெற்ற குண்டு வீச்சுச் சம்பவத்தால் நீர்வேலி, கோப்பாய், ஆவரங்கால் அச்சுவேலிப் பகுதிகள் வரையும் பரபரப்பு நிலை காணப்பட்டது.

இத்தாக்குதலில் எவ்வித உயிரிழப்புக்களோ, குறிப்பிடத்தக்க உடற்சேதங்களோ ஏற்படாதது குறிப்பிடத்தக்கது

கீழ் மாடி பாதிக்கப்படாததால் ஊழியர்களுக்கு காயங்கள் ஏற்படவில்லை கடந்த வியாழக்கிழமையும் இக் கட்டடம் ஹெலியால் குண்டு வீசித் தாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது (இ-119)

## வானத் தாக்குதல் பாதிப்புற்ருேர் விவரம்

### அரச அதிபர் திரட்டுகிருர்

யாழ்ப்பாணம், ஏப். 28 கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் வானத்தாக்குதல் காரணமாக யாழ் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களின் முழு விபரங்களையும் தமக்கு அனுப்பி வைக்கும்படி யாழ் அரச அதிபர் திரு. வி. பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

இது சம்பந்தமாக அரச அதிபர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

அண்மையில் இடம்பெற்ற வானத்தாக்குதலில் யாழ் மாவட்டத்தில் பல மக்கள் பல பகுதிகளில் உயிரிழந்தனர்; உடைமைகள், வீடு வாசல்களை இழந்து மாவட்டத்திற்குள்ளேயே அகதிகளாகி உள்ளனர்.

இது குறித்து மன வருந்துகின்றேன்,

பாதிக்கப்பட்ட யாழ் மாவட்ட பொதுமக்கள் தங்கள் இழப்புக்களை, இழப்புக்களின் விவரம், அதாவது நடைபெற்ற திகதி நேரம், விலாசம், நட்டத்தின் பெறுமதி, பொருள்கள், வீடுகளின் விபரம் ஆகியவற்றை சத்தியகூற்றுப் பத்திரங்களின் மூலம் நான்கு பிரதிகள் தயாரித்து அரச அதிபர், அந்தப் பகுதி உதவி அரச அதிபர், பிரஜைகள்குழுத் தலைவர் / செயலாளர் முதலானோருக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஒரு பிரதியை பாதிக்கப்பட்டவர் தன்னோடு வைத்து இருக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் அனுப்பும் விவரங்களுடன் இயலுமானால் அழிவுற்ற கட்டடங்களைக் காட்டும் புகைப்படங்களை அனுப்பி வைப்பின் உதவியாக இருக்கும்.

1986 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையான காலத்தில் பாதிப்புற்ற மக்களின் விவரங்கள் எம்மால் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளன.

அனுப்பி வைக்கப்படும் தகவல்கள் எதிர்காலத்தில் நிவாரணத் தேவைகளுக்கு மிக உபயோகமாக இருக்கும்

- இப்படி அரச அதிபர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பாப்பரசர் பிரார்த்தனை

வத்திக்கான் ஏப். 28 இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும்.

-இப்படி பரிசுத்த பாப்பரசர் ஞாயிறு நள்ளிரவு நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் பிரார்த்தித்தார்.

வத்திக்கான் நகரில் சென் பீட்டர்ஸ் தேவாலயத்தில் நடந்த இப் பிரார்த்தனைக் கூட்டத்தில் சுமார் 40 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர் (உ-எ)

### பருத்தித்துறை பகுதியிலும் பொம்மர்கள்

பருத்தித்துறை, ஏப் 28 பருத்தித்துறையில் நேற்றுக் காலை 11-15 மணியளவில் இரண்டு பொம்மர்கள் குண்டு வீச்சு விமானங்களும் ஒரு ஹெலிகொப்டரும் சுமார் 15 நிமிடங்களில் வட்டமிட்டன.

மேலும் ஹெலிக்கொப்டர் மக்கள் செறிந்து வாழும் திக்கம் பகுதியில் பல முறை துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தது

நேற்று பொம்மர் குண்டு வீச்சு விமானங்கள் பருத்தித்துறைக்கு மேலாகப் பறந்ததும் மரக்கறி, மீன் சந்தைகள் யாவும் கலைந்தன

அத்துடன் கடைகள் யாவும் உடனே மூடப்பட்டன. பருத்தித்துறை நகரமே வெறிச்சோடிக் காணப்பட்டது. (இ-118)

### சிப்பாய்கள்---

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

வீயூ முகாமுக்குச் சென்றனர் என்று கூறப்படுகின்றது.

சிப்பாய்கள் பிற்பகல் இரண்டு மணி அளவில் பலாலிக்குத் திரும்பிச் சென்றனர்.

செய்தி எழுதும்வரை இறந்தோர், காயமடைந்தோர் விவரங்கள் தெரியவரவில்லை. (இ-119)

### பொம்மர்...

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

னவாக மூடப்பட்டன மக்கள் பதுங்கு குழிகளில் தஞ்சம்புகுந்தனர்.

நல்லூர், யாழ்நகர் ஆகியவற்றை வட்டமிட்ட விமானங்கள் இறுதியில் கோப்பாயையும் வட்டமிட்டு நீர்வேலியில் தாக்குதல் நடத்தி விட்டுச் சென்றன (இ-7)

### ரோந்து..

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

கும் சிப்பாய்களுக்கும் இடையில் நேரடிமோதல் ஏற்பட்டது

நேரடி மோதலின் பின் பஸ்ஸிற்குள் இருந்த பயணிகள் சிப்பாய்களினால் தாக்கப்பட்டனர், இளைஞர்களும் நடுத்தர வயதுடையவர்களும் கீழே இறக்கப்பட்டனர் கண்ணிவெடியால் ஏற்பட்ட கிடங்கினுள் கிடத்த சிப்பாய்களின் உடல்களை அகற்றுமாறு அவர்கள் பணிக்கப்பட்டனர்.

கண்ணிவெடி வெடித்ததில் ஏழு அடி ஆழமான கிடங்கு அங்கு காணப்பட்டது.

பின்பு இளைஞர்களான பஸ் பயணிகளில் ஏழு பேரை சிப்பாய்கள் சுட்டுக் கொன்றனர். (இ-10)

## பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம்

### யாழ் அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 28 அண்மையில் பாதுகாப்புப் படையினரின் தாக்குதலினால் உயிர், உடைமைகள், வீடுகள் முதலியவற்றை இழந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் அளிப்பது குறித்து யாழ் அரச அதிபர் திரு வி. எம். பஞ்சலிங்கம் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிருர்

அறிக்கையில் யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ள விவரங்கள் வருமாறு;-

படையினரின் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் பற்றி பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகளும் உதவி அரசாங்க அதிபர்களும் முறையிட்டிருக்கின்றனர்.

இழப்புக்களை உடனடியாக ஈடுசெய்வது முடியாத காரியம்.

இருந்தும் வீடு, வாசல்களை இழந்து வெளியேறிய குடும்பங்கள் அனைத்துக்கும், தொலைத் தொடர்புச் சாதனங்கள் அற்ற நிலையிலும், புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளருடன் தொடர்பு கொண்டு நிவாரணம் கிடைக்க ஒழுங்கு செய்துள்ளேன்.

அதன்படி கீழ்காணும் குடும்பங்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிவாரணம் வழங்கப்படுகிறது

வல்வெட்டித்துறை- தொண்டமானாறு;- 390 குடும்பங்கள்

கெருடாவில்- 250 குடும்பங்கள்.

கட்டுவன்- வறுத்தலைவிளான்;- 750 குடும்பங்கள்.

குரும்பசிட்டி:- 350 குடும்பங்கள்.

மயிலிட்டிகரை, பலாலி தையிட்டி. ஊறணி: 1,500 குடும்பங்கள்.

இவர்களுக்கு ஒரு கிழமைக்கு தனிநபருக்கு 55 ரூபா, இரண்டு நபர்களுக்கு 85 ரூபா, மூன்று நபர்களுக்கு 105 ரூபா, நான்கு நபர்களுக்கு 185 ரூபா, ஐந்து நபர்களுக்கு 155 ரூபா, ஆறு நபர்களுக்கு 170 ரூபா, ஏழு நபர்களுக்கு 185 ரூபா வீதம் உடனடி நிவாரணம் வழங்கப்படுகிறது.

எட்டுப் பேருக்கும் அதற்கு மேற்பட்டோருக்கும் வாரம் 200 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

இந்த நிலையில் மேலும் பலர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

ஊறணி, தையிட்டி, பலாலி, காங்கேசன்துறை, மயிலிட்டி ஆகிய இடங்களில் இருந்து 1,500 குடும்பங்கள் வெளியேறியுள்ளன.

ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் இருந்து 700 குடும்பங்களும் வல்வெட்டித்துறை தெற்கில் இருந்து 600 குடும்பங்களும் அகதிகளாக வெளியேறியுள்ளன

இவர்களுக்கு நிவாரணம் கிடைக்க புனர்வாழ்வு அமைச்சுக்கு வரமொழிச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன்.

இதனிடையில் வயாவிளான் பகுதியில் வசித்த 23 குடும்பங்களுக்கும் கோப்பாய், பத்தைமேனி கிராமங்களில் வசித்த 74 குடும்பங்களுக்கும் இயூரெக்ஸ் நிறுவனம் மூலமும்,- தெல்லிப்பழையைச் சேர்ந்த 638 குடும்பங்களுக்கு தமிழர் அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் மூலமும் நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழையைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கு தென்னிந்திய திருச்சபையும் 900 குடும்பங்களுக்கு இயூரெக்ஸ் ஸ்தாபனமும் உடனடி நிவாரணமாக உணவுப் பொருள்கள் வழங்க முன்வந்துள்ளன.

இந்த நிவாரண உதவியை இற்றை வரை பெருதவர்கள் உடனே தத்தம் உதவி அரச அதிபர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இப்படி அரச அதிபர் தனது அறிக்கையில் கேட்டுள்ளார். (இ-எ)

### காங்கேசன்துறை வீதியில் மற்றும் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், ஏப் 28 யாழ் கோட்டை முகாமில் இருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட சினைப்பர் தாக்குதலினால் இளைஞர் ஒருவர் பலியானர்.

நல்லூரைச் சேர்ந்த கந்தையா சந்திரசேகரம் (வயது 24) என்பவரே இறந்தவர் ஆவார்.

### லோகசபை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு சௌந்திரி, விவாதம் ஒன்றை நடத்த நேரம் ஒதுக்கப்பட வேண்டும் என்று சபாநாயகரிடம் விண்ணப்பித்தார்.

வெளியுறவு அமைச்சர் திரு ஒதுக்கீடு பற்றிய விவாதத்தின் போது இலங்கை நிலைமை விவாதிக்கப்பட்டதல்லவா? இப்படி சபாநாயகர் பல்ராம் ஜாக்கர் பதிலளித்தார்.

இப்போது தினமும் இலங்கைத் தமிழ்ப் பகுதிகளில் விமானத் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது நாம் வாளாவிருக்க முடியுமா?— இப்படி அ. தி. மு. க. எம். பி. திரு. குழந்தைவேலு கேள்வி எழுப்பினர். (உ-எ)

## இலங்கையில் வெளிச்சக்திகள்; பிற கடற்படை கப்பல்கள் வருகை

### நிலைமையை இந்தியா உன்னிப்பாக கவனிப்பு

புதுடில்லி, ஏப் 28 இலங்கையில் வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடு குறித்தும் வெளிநாட்டு கடற்படைக் கப்பல்கள் இலங்கைக்கு வருவது அதிகரித்திருப்பது குறித்தும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கவலை தெரிவித்திருக்கிருர்.

இந்த நிலை குறித்து இந்தியா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது என்றும் அவர் கூறினர்

புதுடில்லியில் நடைபெற்ற இராணுவ அதிகாரிகளின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கைகள் மூலம் தீர்வு காண முடியாது.

எல்லோரினதும் நன்மை கருதி பதுகொள்ளச் சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டும்

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண டிசம்பர் 19 யோசனைகளின் அடிப்படையில் மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் முயலவேண்டும் – இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ)

### ஆஸ்பத்திரியில் ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஏப். 28 யாழ் பெரியாஸ்பத்திரி வைத்திய அதிகாரிகள், தாதிகள், ஊழியர்கள் கலந்து கொண்ட மௌன ஊர்வலம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

யாழ் வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் காந்தமுத்து விஸ்வரஞ்சன் கடந்த சனிக்கிழமை காங்கேசன்துறையில் வைத்து இராணுவத்தினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்தே இந்த ஊர்வலம் நடைபெற்றது.

விரிவுரை மண்டபத்தில் ஆரம்பமான ஊர்வலம் வெளி நோயாளர் பகுதியூடாக ஆஸ்பத்திரி வீதியால் சென்று ஆஸ்பத்திரி வளவில் உள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் பிரார்த்தனையுடன் முடிவுற்றது

### 45 சிப்பாய்கள்...

(1- பக்கத் தொடர்ச்சி)

தம்மைத் தாமே சுட்டுத் தற்கொலை செய்வதும், இராணுவ உயர் அதிகாரிகளுடன் மோதி அவர்களைக் கொலை செய்வதும், முகாம்களை விட்டுத் தலைமறைவாவதும் இப்போது அடிக்கடி நடந்து வருகின்றன. (உ-10)

## தங்காலைச் சிறையில் 105 தமிழ்க் கைதிகள் தொடர் உண்ணுவிரதம்

கொழும்பு ஏப் 28 வெலிக்கடையில் இருந்து வெளியிடங்களில் உள்ள சிறைகளில் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை ஒரே இடத்தில் வைக்கும்படி கோரி தங்காலைச் சிறைச்சாலையில் 105 தமிழ்க் கைதிகள் தொடர் உண்ணுவிரதம் ஒன்றை மேற்கொண்டிருக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தங்காலைச் சிறையில் இத் தொடர் உண்ணுவிரதம் ஆரம்பமானது

வெலிக்கடைச் சிறையில் 221 தமிழ் அரசியல் கைதிகள், புறக்கோட்டை பஸ் நிலையக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெறும்வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு மறுநாள் சிங்களக் கைதிகள் தமிழ் அரசியல் கைதிகளைத் தாக்கிக் கொலை முயற்சித்தனர்.

அதைத் தொடர்ந்து சிறை அதிகாரிகள் தமிழ் கைதிகளை வேறு சிறைகளுக்கு பிரித்து அனுப்பி விட்டனர்.

தங்காலைச் சிறைக்கு 105 தமிழ்க் கைதிகள் அனுப்பப்பட்டனர்.

அவர்களே இப்போது தொடர் உண்ணுவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

1. தமிழ் கைதிகள் எல்லாரையும் ஒரே இடத்தில் வைக்க வேண்டும்;

2. போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளும் மே மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட வேண்டும். இன்றேல் மே 5 முதல் சாகும்வரை உண்ணுவிரதம் மேற்கொள்ளப்படும் – இப்படி தமிழ் அரசியல் கைதிகள் அறிவித்துள்ளனர். (இ-எ)

## நீத்தார் பட்டியல்

### முத்துத்தம்பி நடேஸ் (இராசலிங்கம்)

புங்குடுதீவு 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் இல. 4, பிறவுண் வீதி வசியும் புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலய அதிபருமாகிய திரு. முத்துத்தம்பி நடேஸ் (இராசலிங்கம்) அவர்கள் 27-04-87 அன்று காலமாகிவிட்டார் இவர் இரத்தினபூபதியின் அன்புக் கணவரும் உமாமகேஸ்வரன் (பாக்சபை-திருநெல்வேலி), அமிர்தவேணி விபுலானந்தன், இருபாகரன் (நோர்வே) ஜெயவேணி (இந்துமகளிர் கல்லூரி), தசிதா (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சதிர்காமநாதன், பாக்கியலெட்சுமியின் அன்புச் சகோதரனும் கமலேஸ்வரி பாலச்சந்திரன், விவேகானந்தன், விபுலானந்தன், யோகநாதன், விமலானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வேலணை சரவணமுத்து. நித்தியானந்தன் (ஜேர்மனி), பூரணி தம்பையா, ஜெயதேவி கிருஷ்ணமூர்த்தி, சகுந்தலாதேவி செல்வராசா (கனடா), கிருஷ்ணானந்தன். புவனசனி (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கனகசபை நல்லதம்பியின் அன்பு மருமகனுமாவார். அன்னாரின் பூதவுடல் 28-04-87 புங்குடுதீவு, சேரதீவு மயானத்தில் பி. ப. 2 மணியளவில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்

1838 தகவல்: உமாமகேஸ்வரன்

## இலங்கை ராணுவ---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சு இலங்கை அரசின் உண்மையான சுரூபத்தைக் காட்டி விட்டது

சிங்கள மக்களுக்கு மட்டுமே தான் பிரதமராக இருப்பதுபோல் அவரின் பேச்சு அமைந்துள்ளது

தமிழ்மக்களை தனது நாட்டு மக்களாக இலங்கை கருதவில்லை என்ற அடிப்படையில் திரு. பிரேமதாசாவின் பேச்சு அமைந்துள்ளது

#### பழிவாங்கல்

கொழும்பு குண்டு வெடிப்புக்குப் பொறுப்பானவர்களைக் கண்டு பிடிக்கத் தவறிய இலங்கை அரசு வேண்டுமென்றே தமிழ் மக்களைப் பழிவாங்குவதில் ஈடுபட்டுள்ளது

யார் மீதாவது பழி போடுவது என்ற எண்ணத்தில் இலங்கை அரசு செயற்படுகின்றது.

பேச்சுவார்த்தைகளை ஒரு முற்றுமுழுதாகப் பயன்படுத்தி முழுக்க முழுக்க இராணுவத் தீர்வு காணுவதற்கு இலங்கை அரசு முற்பட்டுள்ளது.

முதலமைச்சர் இராமச்சந்திரன் இந்த புதுடில்லி சென்ற சமயம் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் எடுத்துச் சொல்லியிருக்கிருர்.

#### விபரீதம் உண்டாகும்

இராணுவ நடவடிக்கையில் ஈடுபடும் இலங்கை அரசின் போக்கால் பெரும் விபரீதங்கள் ஏற்படும்.

இனப்பிரச்சினைக்கு அந்த நாட்டு மக்களே தீர்வு காணவேண்டும்.

இலங்கை அரசின் பாலிஸ போக்கை எதிர்த்து அனைத்து நிற்று தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈரோஸ் போராளிகளும் போராடுகின்றனர்.

வேறு இடங்களில் இருந்து தனது அரசு உதவிகளைப் பெறும் என்று பிரதமர் பிரேமதாசா குறிப்பிட்டிருக்கிருர்.

அந்த நாடுகளில் இருந்து உதவி பெற்ற மற்றைய நாடுகளின் நிலைமையை இலங்கை அரசு நன்ருக உணரவேண்டும்.

#### விடுதலைப் போராட்டம் தோற்றதில்லை

ஒரிரு இடங்களில் தோற்கடிக்கப்பட்டாலும் விடுதலைப் போராட்டங்கள் தோல்வி அடையவில்லை என்பதை உலக வரலாறு நமக்கு நன்ருகச் எடுத்துக் காட்டுகின்றது.

பாதுகாப்பு, ஜனநாயகம், தமிழ் மக்களின் நலன் ஆகியவற்றுக்கு மட்டுமன்றி சிங்கள மக்களின் நலன்களுக்காகவும் இலங்கை அரசு தனது போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும்.

இப்படி அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் சொன்னர். (உ-எ)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

சிவபதம் அடைந்த

திருமதி. நாகரத்தினம்-இரத்தினசபாபதி அவர்கள்



அன்னை மடியில்: 23 - 12 - 1935

ஆண்டவன் அடியில்: 20 - 04 - 1985

திதி: 28 - 04 - 1987

எம்மை வாழ்வித்த, எமக்கு ஒளிதந்த அன்புத் தெய்வம். உங்கள் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கும் அன்புக் கணவர், பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

சருவேலடி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

1239

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15, இல் இயங்கும் உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 28 - 04 - 1987
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office Under Number QJ / 94 / N/87 Telephone, 24805, 23078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org